## தேசிய விஞ்ஞான மன்றம் - 2017

---

தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ் அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பெறவேண்டிய கணக்குகள்

ஆராய்ச்சி மானியத்திலிருந்து சேமிக்கப்பட்ட பணம் காணப்பட்டால் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் 30 நாட்களினுள் கொடையளிக்கப்பட்டவரிடமிருந்து அப் பணம் மன்றத்திற்கு மீளளிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 செப்தெம்பர் இல் உள்ளவாறு செயற்திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் 9 மாதங்கள் தொடக்கம் 14 மாதங்கள் வரையான காலப்பகுதிக்கிடையே செலவிடப்பட்டிருந்த 05 ஆராய்ச்சிகள் தொடர்பாக ரூபா 789,587 தொகையான சேமிக்கப்பட்ட பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள்

2015 மே 15 ஆம் திகதிய மு.அ. 01/2015/01 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 4(அ)(1)(iii) ஆம் பிரிவிற்கு முரணாக வெளிநாட்டுப் பிரயாணங்களிற்கான இணைந்த படிக் கொடுப்பனவுகளின் போது இரண்டாவது வகைக்குரிய உத்தியோகத்தர்கள் முதலாவது வகைக்குரியதாக கருதப்பட்டு இணைந்த படிகள் செலுத்தப்பட்டதன் காரணமாக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 16 சந்தர்ப்பங்களில் ரூபா 1,636,220 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மன்றத்தின் நிதி விளைவுகள் ரூபா 17,990,480 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,931,059 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 15,059,421 ஆன வீழ்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் மீண்டெழும் பெறுவனவுகள் ரூபா 2,339,000 ஆலும் ஏனைய வருமானம் ரூபா 5,974,000 ஆலும் அதிகரித்திருந்த போதிலும் செயற்திட்ட செலவினங்கள் ரூபா 19,491,000 ஆலும் ஏனைய செலவினங்கள் ரூபா 3,402,000 ஆலும் அதிகரித்திருந்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிதி விளைவுகளில் மிகையொன்று காணப்பட்ட போதிலும் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை பற்றாக்குறையொன்று காணப்பட்டது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கம் செய்த போது 2013 ஆம் ஆண்டின் போதான மன்றத்தின் ரூபா 77,199,333 பங்களிப்பு 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 78,807,181 வரை அதிகரித்திருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டின் பங்களிப்பு ரூபா 17,325,454 ஆல் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயலாற்றல் மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட மன்றத்தின் நோக்கங்களிற்குரியதாக நிறைவேற்றப்பட வேண்டிய 6 பிரதான நடவடிக்கைகளின் கீழ் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்காக ரூபா 260 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அப் பிரதான நடவடிக்கைகள் தொடர்பாக இனங்காணப்பட்டிருந்த உப நடவடிக்கைகளிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகள் தனித்தனியாக காட்டப்பட்டிருக்காததால் அவ் உப நடவடிக்கைகளின் நிதிச் செயன்முன்னேற்றத்தை தனித்தனியாக மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ரூபா 214.75 மில்லியன் தொகையான மானியப் பெறுமதியையுடைய 112 போட்டி ஆராய்ச்சி மானியச் (Competitive Research Grants) செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்படி ஆராய்ச்சி செயற்திட்டங்களில் ரூபா 14,552,858 மானியப் பெறுமதியையுடைய 5 செயற்திட்டங்கள் மாத்திரம் வணிகமயப்படுத்தக் கூடியதாக இனங்காணப்பட்டிருந்ததுடன் ரூபா 8,068,692 மானியப் பெறுமதியையுடைய 3 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் மாத்திரம் ஆக்கவுரிமையை பெற்றுக்கொள்வதற்காக குறிப்பிடப்பட்டிருந்தன.

(ii) ரூபா 69,780,007 தொகையான மானியப் பெறுமதியுடைய 31 பிரயோக விஞ்ஞான (Applied Science) ஆராய்ச்சி செயற்திட்டங்கள் தொடர்பாக கொடையாளர்களின் கருத்துரைகளின் பிரகாரம் விவசாயம், சுகாதாரம், உயிரியல் தொழில்நுட்பம், சுற்றாடல் விஞ்ஞானம் மற்றும் மின்வலு போன்ற துறைகளிற்காக ஆராய்ச்சி வெளியீட்டை பிரயோகிக்க முடிந்திருந்ததென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உண்மையாக அத் துறைகளிற்கு ஆராய்ச்சிகளின் வெளியீடு பயன்படுத்தப்பட்டிருந்ததா, கொள்கைகளை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததா, பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காக எவ்வாறு பங்களிக்கின்றது என்பது தொடர்பாக பின்னரான மதிப்பீடு மன்றத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## (இ) தேசிய ஆய்வுப்பொருள் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் - உணவுப் பாதுகாப்பு

---

தேசிய அபிவிருத்திக்காக ஆராய்ச்சிகளின் வெளியீட்டைப் பிரயோகிக்கும் நோக்கில் 2012 ஆம் ஆண்டின் போது உணவுப் பாதுகாப்பு தொடர்பாக 9 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 22,746,297 தொகையான மானியப் பெறுமதியையுடைய 7 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 1,850,820 தொகையான ஆராய்ச்சி கிரயத்தில் இணையத்தளம் ஊடாக அறுவடையை எதிர்வு கூறுவதற்கான வலையமைப்பு முறைமையொன்று அபிவிருத்தி செய்யப்பட்டு அமுல்ப்படுத்துவதற்காக 2016 செப்தெம்பர் மாதத்தில் விவசாய அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ் வலையமைப்பு முறைமை வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டதா என்பதும் விவசாயிகள் வலையமைப்பு முறைமை ஊடாக நன்மைகளை அடைந்திருந்தார்களா என்பதும் தொடர்பாக 2018 மே மாதம் வரையிலும் பின்தொடர் நடவடிக்கை மன்றத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) தேவையான தகவலை தேவையான நேரத்தில் பெறுதல் மற்றும் மிகவும் சிறந்த மேற்பார்வை மற்றும் உற்பத்தி முகாமைத்துவத்தினூடாக சமுதாயத்தின் மாறுகின்ற உணவுக் கேள்வியை பூர்த்தி செய்வதற்காக விவசாயிகளிற்கு இயன்றதாக வழங்கப்படும் சமூக வலையமைப்பொன்றை உருவாக்கும் செயற்திட்டம் ஒன்றிற்காக ரூபா 5,545,484 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அது 2016 ஒக்தோபர் மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இவ் ஆராய்ச்சிகளின் எதிர்பாாக்கப்பட்ட பெறுபேற்றை அடைந்து கொள்வதற்காக 2018 மே வரையிலும் உரிய சமூக வலையமைப்பை அமுல்ப்படுத்துவதற்காக பொருத்தமான நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அறுவடைக்கு முன்னரான தொழில்நுட்பத்தை பிரயோகிப்பதன் ஊடாக உணவுப் பாதுகாப்பை மேற்கொள்ளுதல் மற்றும் மண்ணிற்கு பொட்டாசியம் மற்றும் சிலிக்கனை பிரயோகிப்பதனூடாக புதிய உற்பத்திகளின் தரத்தை அதிகரித்தல் ஆராய்ச்சி செயற்திட்டங்களிற்காக ரூபா 5,588,453 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் போட்டி ஆராய்ச்சி மானியங்களின் கீழ் சிலிக்கன் மற்றும் அரிசி உமியை பயன்படுத்துவதன் மூலம் அறுவடைக்கு முன்னரான மற்றும் பின்னரான குடை மிளகாயின் இயற்கையான தரத்தை பாதுகாப்பது தொடர்பான ஆராய்ச்சி செயற்திட்டமொன்றிற்காக ரூபா 1,462,500 தொகையான மானியம் மேற்படி ஆராய்ச்சியை மேற்கொண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ் இரண்டு செயற்திட்டங்களும் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த முறை பின்பற்றப்பட்ட பகுதிகள் எவை, இந்த முறையை அறிமுகப்படுத்துவதற்காக முறையான நடைமுறையொன்று அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததா, அந் நோக்கத்திற்காக பொறுப்பளிக்கப்பட்ட நிறுவனமொன்று இனங்காணப்பட்டிருந்ததா, இது எவ்வளவு பிரபல்யமானது, பெறப்பட்ட நன்மைகள் எவை என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மன்றத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) ரூபா 3,470,640 தொகையான மானியப் பெறுமதியுடைய இரண்டு ஆராய்ச்சி செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அவ் ஆராய்ச்சி செயற்திட்டங்களிலிருந்து நுண்ணுயிரியல் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தேசிய முறைமையொன்று ஸ்தாபிக்கப்படுதல் மற்றும் இலங்கையின் வறுமைப் பாதிப்பிற்கான உள்ளூர் உணவுப் பாதுகாப்பு செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல் என்பன மேற்கொள்ளப்பட

வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவை நிறைவேற்றப்பட முடியாதிருந்தன.

(ஈ) ஆராய்ச்சி மானியங்களை வழங்கும் உடன்படிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தியடைந்து 3 மாதங்களிற்குள் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 31,783,609 தொகையான 17 பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களிற்கான இறுதி அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் 3 மாதங்கள் தொடக்கம் 19 மாதங்கள் வரையான காலதாமதம் காணப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் போது 14 தொழில்நுட்ப மானியங்களிற்காக ரூபா 11,408,536 தொகையான நிதி வழங்கப்பட்டு 2018 செப்தெம்பர் மாதம் வரை 12 மாதங்கள் தொடக்கம் 20 மாதங்கள் வரையான காலப்பகுதியொன்று கடந்திருந்த போதிலும் உரிய மானியங்கள் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அச் செயற்திட்டங்களின் செயலாற்றல் பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உபகரணங்களை வழங்குவதற்காக வழிகாட்டலின் பிரகாரம் நிதியேற்பாடுகள் பெறப்பட்டு 06 மாதங்களிற்குள் உபகரணம் கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2016 திசெம்பர் 20 இல் ரூபா 2,100,000 மானியமொன்றில் உபகரணம் கொள்வனவு செய்தல் 2018 செப்தெம்பர் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் இன்னொரு நிறுவனத்தில் 1 ஆண்டும் 9 மாதங்களும் ஆன காலப்பகுதியின் போது நிதி விளைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

---------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 22 ஆராய்ச்சி செயற்திட்டங்களில் ரூபா 22,198,794 பெறுமதியான 07 செயற்திட்டங்களிற்காக 2018 மே வரையிலும் நிதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், ரூபா 5,353,815 பெறுமதியான 6 உபகரணங்களின் மானியங்கள் 2017 யூலை 13 இல் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான நிதியை விடுவிப்பதற்காக 2018 பெப்ரவரி 24 வரை 7 மாத காலப்பகுதி கடந்திருந்தது. செயற்திட்டங்களிற்கான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக நிதிகளை வழங்குவதிலுள்ள தாமதம் காரணமாக அந்நிதிகளை பயன்படுத்துவதன் மூலம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஆராய்ச்சி செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றங்களில் வீழ்ச்சி காணப்பட்டதுடன் தொடர்ந்து வரும் ஆண்டில் பெறப்படக்கூடிய மானியங்கள் மட்டுப்படுத்தப்பட முடிந்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017 மே 12 இல் ஆராய்ச்சி செயற்திட்டமொன்றிற்கு ரூபா 2,553,000 தொகையான உபகரண மானியம் பெறப்பட்டிருந்ததுடன் கொள்வனவிலுள்ள தாமதம் காரணமாக பணத்தை திருப்பி செலுத்துமாறு 2018 பெப்ரவரி 23 இல் அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 ஆகஸ்ட் வரையிலும் பணம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) 93 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட முற்பணங்களிலிருந்து 20 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையிலான ரூபா 1,156,131 கூட்டுமொத்த தொகையானது தேவைப்பாட்டை முறையாக ஆய்வுசெய்து முற்பணங்கள் வழங்கப்பட்டிருக்காததன் காரணமாக சேமிக்கப்பட்டிருந்ததுடன் அதே தொகை மீள தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆகஸ்ட் வரையிலும் ரூபா 205,427 கிரயமான 58 பழுதடைந்த இருப்பு பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவகமும் முறையாக செயற்பட வேண்டிய போதிலும் தேசிய விஞ்ஞான மன்றம் மீளாய்வாண்டு தொடர்பாக அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.1.1(அ) பிரிவின் பிரகாரம் செயற்திட்டம் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக முழுமையான பெறுகைச் செயன்முறையின் செயற்திறனான திட்டமிடுதல் அவசியமாகவுள்ள போதிலும் மீளாய்வாண்டின் நவம்பர் மாதமளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென திட்டமிடப்பட்ட ரூபா 71.52 தொகையான மதிப்பிடப்பட்ட கிரயத்தையுடைய 13 பெறுகைகள் நிதி ஏற்பாடுகள் காணப்படாமை மற்றும் பெறுகை தேவைப்படுகின்ற சந்தர்ப்பம் முறையாக தீர்மானிக்கப்படாமை காரணமாக 2017 திசெம்பர் 31 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஈ) பிரிவின் பிரகாரம் விபரமான பெறுகைத் திட்டமொன்று மன்றத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கட்டிடங்கள் மீது தீந்தை பூசுதல் ஒப்பந்தம் ரூபா 4,777,625 பெறுமதியில் ஒப்பந்த கம்பனியொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,208,160 தொகையான விலைப்பட்டியல்கள் நிறைவேற்றப்பட்ட வேலைக்கான கொடுப்பனவுகளை பெறுவதற்காக 2018 மார்ச் 25 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட வேலை தொடர்பான சதுர அடியினை பௌதீக ரீதியாக பரீட்சித்த போது அப்பெறுமதிக்கும் விலைப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட சதுர அடிக்கும் இடையே வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க, ரூபா 699,413 தொகை விலைப்பட்டியலில் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கோவைகளின் கட்டுப்பாடு | தனிநபர் கோவைகளில் உள்ளடக்கப்பட்ட சான்றிதழ்களின் சரியான தன்மை உரிய நிறுவனங்களிடமிருந்து உறுதிப்படுத்தப்படாமை மற்றும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரை மற்றும் வைத்திய அறிக்கைகள் கோவைகளில் உள்ளடக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை |
| (ஆ) ஆராய்ச்சி மானியங்களை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் | பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக சேமிக்கப்பட்ட பணத்தை பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் காணப்படுதல். |
| (இ) பெறுகை | (i) பெறுகை மேற்கொள்ளப்படுதல் தொடர்பான செயன்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படாமை மற்றும் பெறுகைத் திட்டம் நாளதுவரையாக்கப்படாமை.<br><br>(ii) ஒப்பந்த உடன்படிக்கைகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படுதல். |
| (ஈ) இருப்புக் கட்டுப்பாடு | (i) இருப்புப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்ட வகையில் பேணப்படாமை<br><br>(ii) பௌதீக ரீதியாக உள்ள நூலகப் புத்தகங்கள்/ பிரசுரிப்புக்கள் மற்றும் புத்தகங்கள்/ ஆவணங்களிற்கிடையே வேறுபாடுகள் காணப்படுதல்.<br><br>(iii) களஞ்சியம் முறையாகப் பேணப்படாமை.<br><br>(iv) காலாவதியாகியிருந்த மற்றும் அகற்றப்பட வேண்டிய பொருட்களை அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.<br><br>(v) இனங்கண்டு கொள்ளும் இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்காத சொத்துக்கள் காணப்படுதல்.<br><br>(vi) களஞ்சியங்களிற்கு மாற்றப்பட வேண்டிய பொருளிருப்பு பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள பொருட்கள் பௌதீக ரீதியாக காணப்பட்டமை |
| (உ) முற்பணக் கட்டுப்பாடு | எந்தவொரு நடவடிக்கையிலும் பயன்படுத்தப்படாது காணப்பட்ட நிதி முற்பணங்கள் தீர்ப்பனவுசெய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |